1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் (மதுரை மாநகராட்சியை உள்ளிட்ட, ஆனால் சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து) உறுப்பினர்களும் அவரது குடும்பத்தினரும் தங்கள் தங்கள் சொத்து விவரங்களை ஆண்டுக்கு ஒரு முறை அறிவிக்க வேண்டி விதிமுறைகளை அரசாங்கம், 1973 ஏப்ரல் மாதத்தில் வெளியிட்டது.

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரை, சென்னை நகர முனிசிபல் மாநகராட்சி சட்டத்தின் விதிகளுக்கேற்ப சொத்து விவரங்களை அறிவிக்க வேண்டிய வரைவு விதிகளை முதனிலை வெளியீடாக வெளியிட்டு, மாநகராட்சி மன்றத்தின் கருத்தறிய அனுப்பப்பட்டுள்ளது. கருத்தறியக் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன், மேற்கூறிய விதிகள் உறுதி செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். டென்னிஸ் : இதுபோல பஞ்சாயத்து யூனியனில் உள்ள கவுன்சிலர்களுக்கும் இந்த நடைமுறை கையாளப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டப்படி சென்னை மாநகராட்சி மட்டும் வரவில்லை. அதைத் தவிர மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் உட்பட, நகராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட, ஊராட்சி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட ஒன்றிய உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட, ஆகிய எல்லோருக்கும் இது பொருந்தும்.

Singanallur Municipal Council

* 65 *Q*.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any petition containing allegations against the Chairman of the Singanallur Municipal Council was signed and sent to the Government by the members of that Council on 19th September 1972; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதுபற்றிய விசாரணை நடந்திருக்கிறது. அதிகாரிகள் விசாரித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன அறிக்கை தந்தார்கள், குற்றச்சாட்டுகளைப் பற்றி என்ன கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : சிங்காநல்லூர் நகராட்சி மன்றத் தலைவர் மீது குற்றச்சாட்டுகள் கொண்ட புகார் மனு ஒன்று அந்நகராட்சி மன்ற 14 உறுப்பினர்களால் கையெழுத்திடப் பட்டு 19-9-1972 இல் அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் புகார் மனு மீது நகராட்சி மன்ற இயக்குநர் அவர்களின் விரிவான அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி மன்ற இயக்குநர் அவர்கள் தனது கூட்டு இயக்குநரை சிங்காநல்லூருக்கு அனுப்பி குற்றச்சாட்டுகளை நன்கு ஆராய்ந்து, நேர்முக விசாரணை நடத்தி தனது அறிக்கையினை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். குற்றச்சாட்டுகளும், அதன் மீதான அறிக்கையும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அரசுக்குப் புகார் அனுப்பி வெகு நாட்களாகிவிட்டன. அரசின் முடிவு விரைவில் அறிவிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னும் ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும்.

பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப் பட்டரை

*66 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப்பட்டரையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் பிரிவிற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தச்சுப்பட்டரை ஓராண்டாக நட்டத்தில் நடக்கிறது. இதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.